# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2000, மே மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---


2000, யூன் மாதம் 02 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு: ரூபா 3.50**

# 2000 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ— ஓ. 52/98

## தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிலையமொன்று அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்தோடு தொடர்பு பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகவும் கொழும்பில் தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட நிலையமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2000 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையத்தின் தற்போதைய உறுப்பினர்களும் இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் நிலையம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தலும், அவ்வாறு வருதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் தேசிய ஐக்கியத்துக் கான பாக்கீர் மாக்கார் நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றினை வைத்திருக்கவும் ; பயன் படுத்தவும் விருப்பப்படி அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :

(அ) தேசிய ஐக்கியம், சமூகங்களுக்கிடையிலான நட்புறவு, இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமை, மக்களுக்கிடையிலான நல்லெண்ணம் மற்றும் சமாதானம் என்பனவற்றின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் உதவியளித்துப் பேணலும் ;

(ஆ) தேசிய ஐக்கியமெனும் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல் ;

(இ) கல்வி சம்பந்தமானதும் தகவல் அறிவிக்கக் கூடியதுமான சாதனங்களை வெளியிடுதலும் தேசிய ஐக்கியத்தை முன்னேற்றுவதற்கான திரைப் படங்களையும் கட்புல, செவிப்புல பதிவுகளையும் தயாரித்தலும் ;

(ஈ) கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், செயலமர்வு களை நடாத்துவதன் மூலம், தேசிய ஐக்கியத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களைப் பயிற்றுவித்தலும் ;

(உ) தேசிய ஐக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ள மிகச் சிறந்த நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக் குச் சன்மான விருதுகள், பரிசுகள், புலமைப் பரிசில்கள், தோழமைப்பரிசில்கள் வழங்குவதன் மூலம் நினைவூட்டல் அல்லது கௌரவித்தல் ;

(ஊ) இலங்கையில் சகல இனப் பிரிவினர்களினதும் கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கும், பாது காப்பதற்கும் நூல் நிலையங்கள், ஆவணக்காப்பகங் கள் மற்றும் நிலையங்களைத் தாபித்தல் ;

(எ) மறைந்த அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களின் ஆக்கங்கள், சொற்பொழிவுகள் மற்றும் அன்னாரது வாழ்வுடன் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய ஏனைய

சான்றுகள் ஆகியவற்றை உள்ளடக்கக்கூடிய ஆராய்ச்சி நிலையமொன்றையும் அரும்பொருட் சாலையொன்றையும் நிறுவுதல் ;

(ஏ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆராய்ச்சிகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட ஆற்றல்களைப் பெற்ற மாணவர்களுக்குப் புலமைப்பரிசில், கடனுதவி, முற்பணங்கள், உதவுத்தொகை மூலம் உதவி வழங்குதல் ;

(ஐ) செய்தித் தகவல்களை வெளியிடுகையில் இனரீதியான வகுப்பு ரீதியான பாகுபாடு காட்டப்படுவதை ஒழித்தலுக்கும் ; கண்காணித்தலுக்குமான நடவடிக்கை களை குழு கலந்துரையாடல்கள், சம்பாஷணைகள் மற்றும் கூட்டங்களை நடாத்துவதன்மூலம் மேம்படுத்தல் ;

(ஒ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான, இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய மற்ற நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்துதல்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும், கொண்டு நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.**

5. (அ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பன்னிரெண்டு ஏனைய உறுப்பினர்க

ளையும் கொண்ட நிருவாகசபையொன்றின் மூலம் கூட்டுத் தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிருவாகசபை இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்தில் பதவிவகித்த நிருவாகசபை உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (அ) இரண்டுவாரகால அறிவித்தலின் மூலம் கூட்டப் பட்ட, உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டிற்குக் குறை யாத பெரும்பான்மை வாக்குகளின் மூலம் உறுப்பினர்களைச் சேர்த்தல், விலக்கல் பதவிதாங்குநர்களின் அதிகாரம், நடத்தை மற்றும் கடமைகள் தொடர்பிலும், நிருவாகசபைக் கூட்டத்தின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை பற்றியும், கூட்டுத்தாபன அலுவலர்கள் சேவையாளர்களது நடத்தை கடமைகள் பணிகள் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்து வத்திற்காகவும் மற்றும் அதனது குறிக்கோள்களை நிறைவேற்று வதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராத விதி களைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப் பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கப் படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக் கப்படலாம்.

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர் முந்திய நாளன்று வலுவிலிருப்பதான நிறுவனத்தின் விதிகள் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராதனவற்றைப் பொறுத்த வரையில் அவைகள் இப்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அமைப்பிற்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று அமைப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*அமைப்பினால் செலுத்தப் படற்பாலனவும் அமைப்புக்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்.*

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிருவாக சபையின் தலைவரினதும் செயலாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக, அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

9. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பன மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.